1982 பிப்ரவரி 19]

(ஆ) ஆம் எனில் பழுதுபார்க்கும் பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) குள்ளாசெட்டி அணையை மராமத்து செய்வதற்கான வேலை வறட்சி நிவாரணத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடையும் நிலையில் உள்ளது.

அமராவதி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்,

* வினா எண் 275—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி ஆற்றில் மயில்ரங்கம் அருகே அணைகட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) & (ஆ) இத் திட்டம் முதல்நிலை ஆய்வில் உள்ளது என தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம்.

* வினா எண் 276—திரு. ப. நெடுமாறன், திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலுகா குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம் பற்றிய பரிசீலனை எந்தக் கட்டத்தில் உள்ளது?

(ஆ) அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகின்றது.

திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் முழுப்பயனும் மிகவும் பின்தங்கிய வறண்ட பகுதியான பழனிதாலுக்கா, வேடசந்தூர் ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்கும் கிடைக்கின்ற வகையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS